**முதலாம் தவணைப் பரீட்சை -2019**

**தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல்**

**தரம் 6** நேரம் : 45 நிமிடங்கள்

1. கணினியின் சிறப்பியல்பு அல்லாதது

 1) செம்மையின்மை 2) கதி 3) திறன் 4) மாறாத்தன்மை

2. வெளியீட்டுச் சாதனமாக அமைவது
 1) தெரிவிப்பி 2) சாவிப்பலகை 3) நுணுக்குப்பன்னி 4) வருடி

3. உள்ளீட்டுக்கருவியாக அமைவது எது?
 1) அச்சுப்பொறி 2)தெரிவிப்பி 3) பல்லூடக எறிவை 4) சாவிப்பலகை

4. பின்வருவனவற்றுள் உள்தேக்க சாதனமாக அமைவது
 1) இறுவட்டு (CD) 2) புளுரே(Blue ray)
 3) உள் வன்வட்டு (Internal Hard disk) 4) பேனா செலுத்தி (Pen Drive)

5. பணத்தை வைப்பிலிடுவதற்கும் பெறுவதற்கும் வங்கியில் பயன்படுத்தும் பொறி
 1)றோபோ (Robot) 2) இலக்கமுறை (Digital) வெப்பமாணி
 3) MRI பொறி 4) தன்னியக்க காசாள் பொறி (ATM)

6. கணினி உட்பொதிந்த சாதனமாக அமைந்தது
 1) தனியார் கணினி 2) மடிக் கணினி 3) அச்சுப்பொறி 4) துணிச்சலவைப்பொறி

7. தொடர்பாடல் சாதனமாக அமையாதது எது?
 1) வழிப்படுத்தி(Router) 2) மோடம்(Modem)
 3) வலையமைப்பு இடைமுக அட்டை 4) சுட்டி (Mouse)

8. கணினி தொழிற்படும் போது தரவுகள் அறிவுறுத்தல்கள் ஆகியனவற்றை தற்காலிகமாக சேமித்து வைத்திருக்கும் சாதனம்
 1) இறுவட்டு 2)மோடம் 3) முதன்மை நினைவகம் 4)சுட்டி

9. சுட்டும் சாதனமாக அமைவது

 1) வன்வட்டு 2) இறுவட்டு 3) சுட்டி 4) அச்சுப்பொறி

10. கணினி மென் பொருளுக்கு உதாரணமாக அமைவது
 1) தெரிவிப்பி 2) சுட்டி 3) பணிசெயல்முறைமை 4) அச்சுப்பொறி

11. கணினி வன்பொருளுக்கு உதாரணமாக அமைவது
 1) தெரிவிப்பி 2) தரவு 3) வலைமேலோடி 4) பணி செயல்முறைமை

கீழுள்ள செயல்களில் கணினி ஆய்வுகூடத்தினுள் செய்யக்கூடியவற்றிற்கு (சரி ) எனவும் செய்யக்கூடாதவற்றிற்கு (பிழை) எனவும் எழுதுக

12. சாவிப்பலகையின் தூசைத் துடைத்தல் ..........
13. தீயணைக்கும் கருவிகள் பற்றி ஆசிரியருடன் வினவுதல் ..........
14. கதிரையை சுழற்றி விளையாடுதல் ..........
15. பாதணிகளை ஆய்வு கூடத்திற்கு வெளியே வைத்துவிட்டு உள் வருதல் ..........
16. ஆசிரியரின் அனுமதியின்றி அச்சுப்பொறிக்கு மின் இணைத்தல் ..........
17. வெளித்தேக்க சாதனங்களை நச்சுநிரல் சோதனை செய்யாது கணினியில் பொருத்துதல்……...
18. பேனாவை கணினியிலுள்ள துறைகளில் (Port) நுழைத்தல் ..........
19. பயன்படுத்திய சாதனங்களை உரிய இடத்தில் ஒழுங்காக வைத்தல் ..........
20. தெரிவிப்பியில் கைகளை வைத்து அழுத்துதல் ..........

Techதமிழ்

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

முதலாம் தவணைப் பரீட்சை மார்ச் 2019

தரம் 6 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் நேரம்-1மணி

பகுதி 1

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1. உள்ளீட்டுச்சாதனம் கொண்ட கூட்டம் எது?
    a. சுட்டி, சாவிப்பலகை, வருடி
    b. சாவிப்பலகை, தெரிவிப்பி, வருடி
    c. அச்சுப்பொறி, வருடி, சுட்டி
    d. அச்சுப்பொறி, தெரிவிப்பி, சுட்டி
2. கணினி மென்பொருளுக்கு உதாரணமாக அமைவது?
    a. பணிச்செயலமுறைமை
    b. அச்சுப்பொறி
    c. தெரிவிப்பி
    d. நெகிழ்வட்டு
3. கணினி வன்பொருளுக்கு உதாரணமாக அமையாதது?
    a. வலைமேலோடி
    b. வழிப்படுத்தி
    c. சுட்டி
    d. மொடெம்
4. வங்கியில் பணத்தை வைப்புச் செய்வதற்கும் பெறுவதற்கும் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் சாதனம் எது?
    a. தன்னியக்க காசாள் பொறி
    b. இலத்திரனியல் அட்டை
    c. இணைய வங்கியியல்
    d. குறுஞ்செய்தி மூலமான வங்கியியல்
5. வெளித் தெக்ககம் அல்லாதது எது?
    a. இறுவட்டு
    b. இலக்க முறைக் காணொளி
    c. உள் வன்வட்டு
    d. புளூறே
6. கணினியின் முதன்மை நினைவகம் ஒரு
    a. தற்காலிகமாக சேமித்துக் கொள்ளும் சாதனம்
    b. நிரந்தரமாக சேமித்துக் கொள்ளும் சாதனம்
    c. தற்காலிகமாக சேமித்துக் கொள்ளும் ஆனால் நிரந்தரமாக மாற்றலாம்
    d. மேற்கூறிய எதுவும் அல்ல
7. ஈயம் மனித உடலில் சேர்வதனால் ஏற்படக்கூடிய நோய் எது?
    a. மூளை வீக்கமடைதல்
    b. இதயப் பாதிப்பு
    c. மூளை, ஈரல் மற்றும் இரத்த ஓட்டம் சீரின்மை
    d. நுரையீரல் புற்று நோய்
8. கணினி ஆய்கூடத்தினுள் செய்யக்கூடாத செயல் எது?
    a. பயன்படுத்திய சாதனங்களை உரிய இடத்தில் வைத்தல்
    b. ஆசிரியரின் அனுமதியின்றி பல்லூடக எறி கருவிக்கு மின் வழங்கல்
    c. அமைதியாகவும் ஆர்வமாகவும் கணினி செயற்பாட்டில் ஈடுபடல்
    d. சாவிப்பலகையின் தூசைத்துடைத்தல்
9. கையினால் தொட்டு உணரமுடியாத தரவுகளும் அறிவுறுத்தல்களும் இடம்பெறும் செய்நிரல் எது?
    a. மென்பொருள்
    b. வன்பொருள்
    c. பிறழ்பொருள்
    d. மேற்கூறிய எதுவும் அல்ல
10. கடவுச்சொல்லில் இருக்கக்கூடிய வரியுருக்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை எது?
    a. 10
    b. 12
    c. 8
    d. 6

பகுதி 2

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1. கணினி என்றால் என்ன?
2. கணினியின் அடிப்படைத் தொழில்கள் மூன்றையும் தருக?
3. கணினியின் தேக்கச் சாதனங்களின் இரு வகைகளையும் கூறி அவற்றிற்கு ஒவ்வொரு உதாரணம் தருக?
4. பாடசாலையில் கணினி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் நான்கு தருக?
5. பயன்படுத்திக்கொண்டிருக்கும் கணினியின் இயக்கத்தை நிறுத்தும் படிமுறை நான்கையும் ஒழுங்குமுறையாக தருக?.
6. கணினி ஆய்வுகூடத்தைப் பயன்படுத்தும் நாம் தவிர்க்கவேண்டிய ஏழு செயல்களையும் தருக?
7. கணினியைப் பயன்படுத்தும்போது பேண வேண்டிய சரியான கொண்ணிலை ஐந்தையும் தருக?
8. படத்தில் காட்டப்பட்டுள்ள சாதனங்களைப் பெயரிடுக




A - ................................................ B - ................................................

C - ................................................ D - ................................................

E - ................................................ F - ................................................

G - ................................................